# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்)

**இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கே. காதர் மஸ்தான் அவர்களால் 2025 ஓகத்து மாதம் 06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது

(2025 யூலை மாதம் 18 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

[30 ஆம் சட்டமூலம்]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 101.00 தபாற் செலவு : ரூபா 150.00

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

# இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்)

## இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**சுருக்கப் பெயர்**

1. இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின்        ஆம் இலக்க, இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகத்தைக் கூட்டிணைத்தல்**

2. (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''நிறுவகம்'''' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ''இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகத்தின் இப்போது சேர்த்துக்கொள்ளப்படுகின்றவாறான அத்தகையோரான ஆட்களும் இச்சாதனத்தின் பயனைக் கொண்டு நிறுவகத்தின் உறுப்பினர்களாக இருத்தலும் அப்பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத் தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தல் வேண்டுமென்பதுடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எல்லாக் கருமங்களும் இடைநேர்விளைவானதும் அல்லது தொடர்புடைய எல்லாக் கருமங்களையும் செய்வதற்குமான தத்துவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழு இச்சட்டத்திலும் விதிகளிலும் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் நிறுவகத்தின் உறுப்பாண்மையின் பெரும்பான்மை அக்கறைகளை பிரதிநிதித்துவப்படுத்தல் வேண்டுமென்பதுடன் வசதிகள் முகாமைத்துவ தொழிலாண்மையின் தொழில்வாண்மைசார் நியமங்களைப் போற்றிக்காத்தலும் வேண்டும்.

(3) நிறுவகத்தின் உத்தியோகபூர்வ சுருக்கீடு IFMSL ஆகவிருத்தல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பொதுக் குறிக் கோள்கள்

**3**. கூட்டிணைக்கப்பட்ட குழு அமைத்துருவாக்கப் படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) வசதிகள் முகாமைத்துவத்தின் தொழில்வாண்மை தொடர்பில் தொழில்வாண்மையின் அக்கறை, அந்தஸ்து, நலன்புரி, உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளையும் பொது அக்கறையினையும் பாதுகாத்தலும் மேம்படுத்தலும்;

(ஆ) வசதிகள் முகாமைத்துவம் தொடர்பிலான கருமங்கள் பற்றி பகிரங்க அதிகாரசபைகளுக்கு ஆலோசனை வழங்குதலும் தொடர்பாடலும்;

(இ) நிறுவகத்திற்குகுறிப்பீடுசெய்யப்படக்கூடியவாறான வசதிகள் முகாமைத்துவம் மீதான ஏதேனும் பிணக்கிற்கு நடுத்தீர்ப்பளித்தல்;

(ஈ) வசதிகள் முகாமைத்துவம் மற்றும் தொடர்புபட்ட விடயங்கள் பற்றிய அறிவினைப் பரப்பும் பொருட்டு விரிவுரைகளையும் கலந்துரையாடல்களையும் ஒழுங்கு செய்தலும் புத்தகங்களையும் ஏனைய உபகரணங்களையும் வெளியிடுதலும்;

(உ) வசதிகள் முகாமைத்துவம் தொடர்பில் சட்டக்கற்கை மற்றும் தொழிலை ஊக்குவித்தல்;

(ஊ) வசதிகள் முகாமைத்துவம் என்னும் துறையில் சாதனைகளுக்கான விருதுகளையும் பரிசுகளையும் உருவாக்குதலும் அளித்தலும்;

(எ) நிறுவகத்தின் உறுப்பாண்மைக்கான அனுமதியினை ஒழுங்கு செய்தலும் மேற்பார்வை செய்தலும்

கட்டுப்படுத்தலும், தொழில் வாண்மை சார்ந்த கல்வியினை பொறுப்பெடுத்தலும் ஒழுங்குபடுத்தலும் மற்றும் வசதிகள் முகாமைத்துவத்தினை செய்வதற்கு விரும்புகின்ற ஆட்களுக்கு பயிற்சியளித்தலும், கற்கை நெறிகளை விதித்துரைத்தலும் அங்கீகரித்தலும் மற்றும் நிறுவகத்தின் உறுப்பாண்மைக்கான பரீட்சைகளில் தேர்வு பெறுதலும் அத்தகைய கற்கை நெறிகள் மற்றும் பரீட்சைகளை நடாத்துதல் அல்லது நடாத்துவதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் வசதிகள் முகாமைத்துவம் எனும் துறையில் கல்வியை முன்னெடுப்பதற்கு ஏற்றங்கீகரிக்கப்பட்ட கல்விசார் நிறுவனங்களுடன் இணைதலும்;

(ஏ) நிறுவகத்தின் உறுப்பாண்மைக்கான தகைமைகள் மற்றும் தகமையீனங்களையும் மற்றும் நிறுவகத்தின் உறுப்பினர்களுக்கான தொழில்வாண்மைசார் நடத்தை பற்றிய நியமங்களையும் அவற்றுக்கு அமைந்தொழுகுவதனை உறுதிப்படுத்துதலை விதித் துரைத்தலும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பொதுவான தத்துவங்களும் கடமைகளும்

**4**. இச்சட்டத்தின் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழு பின்வரும் தத்துவங்கள் உட்பட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்து வதற்கு அவசியமானவற்றின் அத்தகைய எல்லாச் செயல்களையும் புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் பிரயோகிப்பதற்குமான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கத்துக்காக ஏதேனும் அசையாத ஆதனத்தினைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தல் அல்லது கொடுத்தல் அடமானம் வைத்தல், விற்பனை செய்தல், கொடுத்து மாற்றுதல் அல்லது வேறு வகையில் பராதீனப்படுத்துதல், கையாளுதல் அல்லது கையுதிர்த்தல்;

(ஆ) சஞ்சிகைகள், தனிப்பெருநூல்கள், புத்தகங்கள், பருவ விதழ்கள், செய்தித்தாள் கட்டுரைகள் என்பவற்றை வெளியிடுதல் மற்றும் வசதிகள் முகாமைத்தும் பற்றிய தகவல்களைப் பரப்புவதற்காக ஊடகத்தினூடாக தோதான தகவல்களை வெளியிடுதல்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிறுவகத்தின் குறிக் கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டுள்ள இலங்கையில் அல்லது வெளிநாட்டிலிலுள்ள ஏனைய ஆட்கள், முகவராண்மைகள் மற்றும் ஒழுங்கமைப்புகளுடன் இணைந்து செயற்படுதல், உதவுதல், உதவியைப் பெறுதல் மற்றும் தொடர்புகளை விருத்தி செய்தல்;

(ஈ) எவையேனும் கொடைகள், அறக்கட்டளை அல்லது விருப்பாலான கையளிப்பினை ஏற்றுக் கொள்ளுதலும் அத்தகைய ஏதேனும் கொடை, விருப்பாவணக்கையளிப்பினை அல்லது அறக் கட்டளையுடன் இணைந்த எவை யேனும் நம்பிக்கைப் பொறுப்புகளை நிறைவேற்றுதல்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படுத்தப்படும் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித் தலும், தொழிலுக்கமர்த்துதலும், இட மாற்றுதலும், அவர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் பதவி நீக்குதலும் அவர்களுடைய சேவைகள் பற்றிய நியதி மற்றும் நிபந்தனைகளை விதித்துரைத்தல்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழு பொருத்தமானதெனக் கருதக் கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் அத்தகைய பிணைப்பொறுப்புகளின் மேல்

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக தேவைப்படும் எவையேனும் பணங்களை கடனாகப் பெறுதல்;

(எ) உறுப்பாண்மையின் ஏதேனும் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்தல் மற்றும் அத்தகைய உறுப்பாண்மையினை மீளப்புதுப்பிப்பதற்குக் கட்டணங்களை அறவிடுதல்;

(ஏ) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் நடாத்தப்படும் தகுதி காண் பரீட்சைகள் மற்றும் கற்கைநெறிகளுக்கு ஆட்களை அனுமதிப்பதற்கான கட்டணங்களை அறவிடுதல்;

(ஐ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தகுதியானதென கருதக் கூடியவாறான அத்தகைய முறையில் குழுவின் நோக்கங்களுக்காக உடனடியாக தேவைப்படாத கூட்டிணைக் கப்பட்ட குழுவின் அத்தகைய பணங்களை முதலீடு செய்தல், நம்பிக்கைப் பொறுப்புகளை உருவாக்குதலும் நிருவகித்தலும் மற்றும் வங்கியினால் நடைமுறை, வைப்பு மற்றும் சேமிப்புக் கணக்குகளைப் பேணுதல்;

(ஒ) கூட்டிணைக்கப்பட்ட குழு உறுப்பினர்களுக் கெதிராக தொழில்வாண்மைசார் பிறழ்நடத்தை பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு ஒழுக்காற்றுக் குழுக்களை நியமித்தல்;

(ஓ) கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கான தொழில் வாண்மைசார் திட்டத்தினையும் அவற்றை நடை முறைப்படுத்துவதற்கான ஒழுங்கேற்பாடுகளையும் ஏற்றுக்கொள்ளுதல்;

(ஔ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முறையான முகாமைத்துவம் மற்றும் சட்டபூர்வமான உரிமையை உறுதிப்படுத்துதல்;

(க) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொதுக்கூட்டத்தில் காலத்துக்குக்காலம் விதிகளை ஏற்றுக்கொள்ளுதலும் வாக்களிக்கும் பெரும்பான்மை உறுப்பினர்களின் தேவைப்பாட்டிற்கிணங்க கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமைத்துவம் செய்வதற் காகவும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும் விதிகளை ஆக்குதல்; அத்துடன்

(ங) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு இடைநேர்விளைவானதான அல்லது உசிதமானதாக இருக்கின்ற அத்தகைய சட்ட பூர்வமான விடயங்களையும் செய்தல்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள்

**5**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாகவும் இச்சட்டத் தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமைவாகவும் கூட்டிணைக் கப்பட்ட குழுவின் அலுவல்களின் முகாமையும், கட்டுப் பாடும் மற்றும் நிருவாகமும் இச்சட்டத்தின் பிரிவு 21 இன்கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கிணங்கவும் தெரிவு செய்யப்படக்கூடியவாறான அல்லது நியமிக்கப்படக்கூடியவாறான பதவிதாங்குநர் களையும் அத்தகைய ஏனைய உறுப்பினர்களையும் கொண்ட (இதனகத்துப் பின்னர் “பேரவை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) பொதுப் பேரவையில உரித்தாகக்ப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் முதலாவது பேரவை

**6**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது பேரவை இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பேரவையின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பேரவையானது வழியுரிமை பேரவை எனும் சந்தர்ப்பத்தில், தலைவர், உபதலைவர், உடன் முன்னாள் தலைவர் என்போரையும் செயலாளர், பொருளாளர் உதவிச் செயலாளர், உதவிப் பொருளாளர் மற்றும் கூட்டிணைக்

கப்பட்ட குழுவின் விதிகளுக்கிணங்க தெரிவுசெய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஒன்பதுக்குக் குறையாத தொழில் வாண்மைசார் உறுப்பினர்களைக் கொண்டுள்ள அத்தகைய வேறு எண்ணிக்கையிலான உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு

**7**. (1) பேரவையானது உறுப்பினர்கள் பற்றிய இடாப்பினைப் பேணுதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முற்போந்த நாளன்று உள்ளவரான ஒவ்வொரு ஆளின் பெயர்களும் நிறுவகத்தின் உறுப்பினராகப் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னரான ஒவ்வொரு கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினரொருவராக முறையாக அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(2) பேரவை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கிணங்க கூடுதலும் பணியாற்றுதலும் வேண்டும்.

சபையினதும் குழுக்களினதும் தாபிப்பு

**8**. பேரவை அது விருப்பம் என எண்ணக்கூடியவாறானதும் அத்தகைய சபைகள் மற்றும் குழுக்களின் வரையறுக்கப்பட்ட தத்துவங்களுக்கமையவும் சபைகளையும் குழுக்களையும் தாபிக்கலாம் என்பதுடன் அது பொருத்தமானதெனக் கருதினால் அவர்களுக்கு தத்துவங்களை கையளிக்கலாம்.

நிறுவகத்தின் உறுப்பாண்மை

**9**. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, உறுப்பாண்மையின் ஒவ்வொரு தரத்துக்குமான தகைமையானது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளில் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(2) உறுப்பாண்மையானது பின்வரும் தரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) மாணவர்கள்;

(ஆ) இணையாளர்;

(இ) உறுப்பினர்;

(ஈ) கூட்டு உறுப்பினர்; அத்துடன்

(உ) கௌரவ உறுப்பினர் அல்லது கௌரவ கூட்டு உறுப்பினர்.

தொழில் வாண்மைசார் உறுப்பினர்கள்

**10**. (1) உட்பிரிவு 9(2) இன் உட்பந்திகள் (இ), (ஈ) மற்றும் (உ) என்பவற்றின்கீழ் குறிப்பிடப்பட்ட உறுப்பாண்மையின் தரங்கள் "உயர் தொழில்வாண்மைசார் உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு தொழில்வாண்மைசார் உறுப்பினரும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பேரவைக்கு அல்லது ஏதேனும் சபைக்கு தெரிவுசெய்யப்படுவதற்கு தகைமையுடையவராதல் வேண்டுமென்பதுடன் எல்லா உரிமைகளுக்கும் மற்றும் சிறப்புரிமைகளுக்கு உரித்துடையவராக்கப்படுதலும் வேண்டும்.

(3) எல்லா உறுப்பினர்களும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொதுக் கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும் எவ்வாறாயினும், தொழில்வாண்மைசார் உறுப்பினர்கள் மட்டும் வாக்களிப்பதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கௌரவ உறுப்பாண்மை

**11**. கூட்டிணைக்கப்பட்ட குழு பேரவையின் ஆலோசனையின் பேரில் நிறுவகத்தின் உறுப்பினரல்லாதவரும் வசதிகள் முகாமைத்துவம் எனும் தொழில்வாண்மையில் குறிப்பிடத்தக்கதும் தேர்ச்சி பெற்ற சேவைகளை வழங்கி பேரவையின் அபிப்பிராயத்தில் உள்ளவருமான எவரேனும் ஆளுக்கு, கௌரவ உறுப்பினராக அல்லது கௌரவ கூட்டு உறுப்பினராக உறுப்பாண்மையை அளிக்கலாம்.

சுருக்கப் பதவிப் பெயர்கள்

**12**. (1) கூட்டு உறுப்பினராக பதிவுசெய்யப்பட்டவொருவரான நிறுவகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் அவருடைய பெயரின் பின்னால் "F.IFMSL" எனும் சுருக்கீட்டுப் பதவியை பயன்படுத்துவதற்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.

(2) உறுப்பினரொருவராக பதிவு செய்யப்பட்டவரான நிறுவகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் அவருடைய பெயரின் பின்னால் “M.IFMSL” எனும் சுருக்கீட்டுப் பதவியை பயன் படுத்துவதற்கு உரித்துடையராக்கப்படுதல் வேண்டும்.

(3) நிறுவனத்தின் இணையாளராக பதிவுசெய்யப் பட்டவரான நிறுவகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் அவருடைய பெயரின் பின்னால் “A.IFMSL” எனும் சுருக்கீட்டுப் பதவியை பயன்படுத்துவதற்கு உரித்துடையராக்கப்படுதல் வேண்டும்.

உறுப்பாண்மை கட்டளைக்கல்

**13**. காலத்துக்குக்காலம், பேரவையினால் விதந்துரைக்கப் பட்டதான கூட்டிணைக்கப்பட்ட குழுவானது துணைச் சட்டங்களுக்கிணங்க, உறுப்பினர்களுக்கான இயைபான உறுப்பாண்மை கட்டளைக்கல் மற்றும் உறுப்பாண்மை கட்டணங்கள் பற்றி தீர்மானித்தல் வேண்டும்.

பட்டயம் பெற்ற வசதிகள் முகாமையாளர்

**14**. அனைத்து தொழில்வாண்மைசார் உறுப்பினர்களும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, பட்டயம்பெற்ற வசதிகள் முகாமையாளரொருவராக முறையாக பதிவு செய்யப்படுகின்றமைக்கமைய, “பட்டயம்பெற்ற வசதிகள் முகாமையாளர்” எனும் தலைப்பை எடுத்துப் பயன் படுத்துவதற்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.

பட்டயம் பெற்ற வசதிகள் முகாமையாளர் எனும் தலைப்பினை பயன்படுத்துதல்

**15**. (1) பட்டயம்பெற்ற வசதிகள் முகாமையாளரொருவராக இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படாதவரான ஆளொருவர், சொல்லப்பட்ட தலைப்பினைப் பயன்படுத்துவதற்கு உரித்துடையவராக்கப்படமாட்டார் என்பதுடன் பட்டயம் பெற்ற வசதிகள் முகாமையாளரொருவராக அவரால் அளிக்கப் பட்ட தொழில்வாண்மைசார் சேவைகளுக்காக எவையேனும் கட்டணங்களை அறவிடுவதற்காக நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கினையும் தொடரமுடியாது.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அனைத்து பட்டயம் பெற்ற வசதி முகாமையாளர்களும் அவர் அல்லது அவள் தாம் பட்டயம்பெற்ற வசதி முகாமையாளர் என

சுட்டிக்காட்டுவதற்கு அவருடைய பெயரின் பின்னால், “C.FM” எனும் சுருக்கீட்டினைப் பயன்படுத்துவதற்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.

பட்டயம் பெற்ற வசதிகள் முகாமையாளருக்கான விண்ணப்பக் கட்டணம்

**16**. பேரவை பட்டயம்பெற்ற வசதிகள் முகாமையாளரொருவராக பதிவுசெய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் அத்தகைய பதிவு தொடர்பில் செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள் பற்றியும் விதித்துரைத்தல் வேண்டும்.

பட்டயம் பெற்ற வசதிகள் முகாமையாளருக்கான பொதுவான தகைமையீனங்கள்

**17**. (1) ஆளெவரும், நிறுவகத்தின் தொழில்வாண்மைசார் உறுப்பினரொருவராக இருந்தாலொழிய, பட்டயம் பெற்ற வசதிகள் முகாமையாளரொருவராக பதிவு செய்யப்படுதலாகாது.

(2) ஆளெவரும் பின்வருவனவற்றுக்காக பட்டயம் பெற்ற வசதிகள் முகாமையாளரொருவராக பதிவுசெய்யப்படுவதற்கு உரித்துடையவராக்கப்படுதலாகாது -

(அ) இருபத்தொரு வயதினை எய்யாதவராக இருப்பின்;

(ஆ) இலங்கை பிரசையொருவராக அல்லாதிருப்பின்;

(இ) அவர் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினால் சித்தசுவாதீனமற்றவர் என தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(ஈ) அவர் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் வகையற்றவராக அல்லது வங்குரோத்தாளராக தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(உ) அவர் ஒழுக்கக்கேட்டுடன் தொடர்புடைய மறியற்தண்டனையுடன் தண்டிக்கப்படக்கூடிய அல்லது அதனையொத்த தண்டனையுடன் தொடர்புபட்ட மற்றும் மன்னிப்பு அளிக்கப்படாததுமான ஏதேனும் தவறுக்கு இலங்கையிலாயினுஞ்சரி அல்லது வேறு இடத்திலாயினுஞ்சரி

தகுதி வாய்ந்த நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டிருப்பின்.

உறுப்பாண்மை அலுவல்கள் சபையும் அதன் அமைப்பும்

**18**. (1) பிரிவு 8 இன் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப் பட்ட குழுவின் நோக்கத்துக்கான உறுப்பாண்மை அலுவல்கள் சபை ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) உறுப்பாண்மை அலுவல்கள் சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) நிறுவகத்தின் ஆண்டிறுதி பொதுக்கூட்டத்தில் அல்லது விசேட பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப் பட்ட நிறுவகத்தின் முன்னைய தலைவர் அவர் சபையின் தவிசாளராதல் வேண்டும் ;அத்துடன்

(ஆ) பேரவையினால் நியமிக்கப்பட்ட நிறுவகத்தின் மூன்று சிரேட்ட தொழில்வாண்மைசார் உறுப்பினர்கள்.

உறுப்பாண்மை அலுவல்கள் சபையின் பதவிக் காலம்

**19**. விடயத்துக்கேற்ப, பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது தெரிவுசெய்யப்பட்ட தவிசாளர் மற்றும் உறுப் பினர்கள் ஓராண்டு (01) பதவிக்காலத்துக்கு பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன் உறுப்பாண்மை அலுவல்கள் சபை மீது விடயத்துக்கேற்ப அத்தகைய தவிசாளர் அல்லது உறுப்பினர் பதவி வகிப்பது நிறுத்தப்படும் போது, ஓராண்டு முடிவின் பின்னர் மீள் தெரிவுக்கு அல்லது மீள் நியமனத்துக்கு தகவுடையவராக்கப்படுதலும் வேண்டும்.

உறுப்பாண்மை அலுவல்கள் சபையின் கூட்டங்கள்

**20**. உறுப்பாண்மை அலுவல்கள் சபையின் தவிசாளர் சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை தாங்குதல் வேண்டுமென்பதுடன் தவிசாளர் சபையின் ஏதேனும் கூட்டத்திற்கு சமுகமளிக்காத போது சமுகமாயுள்ள உறுப்பி னர்களினால் தெரிவுசெய்யப்பட்ட எவரேனும் உறுப்பினர் அத்தகைய கூட்டத்திற்கு தலைமைதாங்குதலும் வேண்டும்.

உறுப்பாண்மை அலுவல்கள் சபையின் பதிவாளர்/ செயலாளர்

**21**. (1) பேரவை உறுப்பாண்மை அலுவல்கள் சபையின் பதிவாளரொருவரை நியமித்தல் வேண்டுமென்பதுடன் அவர் சபைக்கான செயலாளராகவும் இருத்தல் வேண்டும்.

(2) பதிவாளர் சபையின் சட்ட நடவடிக்கைமுறைகள் பற்றி கூட்டக் குறிப்புகளை வைத்திருத்தல் வேண்டும்.

உறுப்பாண்மை அலுவல்கள் சபையிலிருந்து பதவி விலகல்

**22**. (1) உறுப்பாண்மை அலுவல்கள் சபையின் உறுப்பினரொருவர் சபையின் மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு சமுகமளிக்காத காரணத்தினால் அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு இலங்கையில் இல்லாமை அல்லது பதிவாளருக்கு அளிக்கப்பட்ட பதவிவிலகல் எனும் காரணத்தினால் பதவி விலகுதல் வேண்டும்.

(2) விடயத்துக்கேற்ப, தெரிவுசெய்யப்பட்டதாயினுஞ்சரி அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்டதாயினுஞ்சரி சபையின் உறுப்பினரின் இறப்பு அல்லது பதவி விலகல் எனும் பட்சத்தில், இன்னோராள் அத்தகைய இடத்துக்குத் தெரிவுசெய்யப்படுதல் அல்லது பெயர் குறித்து நியமிக்கப் படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்துக்காக பதவி வகித்தல் வேண்டும்.

உறுப்பாண்மை அலுவல்கள் சபையிடமிருந்து உறுப்பினர்களின் தகைமை யீனங்கள்

**23**. (1) பேரவை உறுப்பாண்மை அலுவல்கள் சபையின் உறுப்பினர்களின் தகைமையீனங்களை பற்றி தீர்மானித்தல் வேண்டும்.

(2) பேரவை உறுப்பாண்மை அலுவல்கள் சபையிலிருந்து எவரேனும் உறுப்பினரை அகற்றுவதற்கான தத்துவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இதன்கண் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கமைய, உறுப்பாண்மை அலுவல்கள் சபை அதன் கூட்டங்கள் தொடர்பில் சொந்த நடவடிக்கைமுறை பற்றியும் அத்தகைய கூட்டங்களில் வியாபார கொடுக்கல்வாங்கல்கள் பற்றியும் ஒழுங்குபடுத்தலாம்.

உறுப்பாண்மை அலுவல்கள் சபையின் பணிகள்

**24.** உறுப்பாண்மை அலுவல்கள் சபையின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) பதிவுசெய்யப்பட வேண்டிய இச்சட்டத்தின் கீழ் தகைமைபெற்ற அத்தகைய தொழில்வாண்மைசார் உறுப்பினர்களை பட்டயம்பெற்ற வசதிகள் முகாமையாளர்களாக பதிவு செய்தல்;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய பதிவினை இடைநிறுத்தல், இல்லாதாக்குதல் அல்லது சீராக்குதல்;

(இ) பட்டயம்பெற்ற வசதிகள் முகாமையாளர்கள் பற்றிய இடாப்பினை பேணுதலும் வெளியிடுதலும்.

பட்டயம்பெற்ற வசதிகள் முகாமையாளர்களின் இடாப்பு

**25.** (1) பதிவாளர் உறுப்பாண்மை அலுவல்கள் சபையின் பணிப்புகளுக்கமைய பட்டயம்பெற்ற வசதிகள் முகாமையாளர்களின் இடாப்பினை சபையின் முதலாவது கூட்டத்தின் திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பிந்தாமல் தயாரித்தல் வேண்டும்.

(2) சபை அவ்வாறு தயாரிக்கப்பட்ட இடாப்பின் பிரதிகளை எடுக்கச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன் அவை சபையின் முதலாவது கூட்டத்தின் பின்னர் ஓராண்டுக்கு பிந்தாமலும் அதன் பின்னர் ஆண்டுதோறும் வர்த்தமானியில் வெளியிடுதலும் வேண்டும்.

(3) குற்றவியலாயினுஞ்சரி அல்லது குடியியலாயினுஞ்சரி, எவையேனும் சட்ட நடவடிக்கைமுறைகளில் :-

(அ) விடயத்துக்கேற்ப, பட்டயம் பெற்ற வசதி முகாமையாள ரொருவராக எவரேனும் ஆளின் பெயர் பதிவுசெய்யப்பட்டுள்ளதா அல்லது இல்லையா என்பதனை குறிப்பிடும் இடாப்பிலிருந்தான ஏதேனும் பிரித்தெடுப்பு அல்லது பிரதி; அல்லது

(ஆ) பட்டயம்பெற்ற வசதி முகாமையாளரொருவராக எவரேனும் ஆளின் பெயர் பதிவுசெய்யப்பட்டுள்ளதா அல்லது இல்லையா என்பதனைக் குறிப்பிட்டு பதிவாளரின் கைப்பட வழங்கப்பட்ட சான்றிதழொன்று,

என்பன அதன்கண் தரப்பட்டுள்ள நிகழ்வுகள் பற்றி முகத்தோற்றளவிலான சான்றினை அமைத்துருவாக்குதல் வேண்டுமென்பதுடன் மேலதிக எண்பிப்பு இன்றி சான்றாக அனுமதிக்கப்படுதலும் வேண்டும்.

பட்டயம்பெற்ற வசதிகள் முகாமை யாளர்களைப் பதிவு செய்தல்

**26**. (1) பேரவை பட்டயம்பெற்ற வசதிகள் முகாமையாளரொருவராக பதிவுசெய்தற்காக விண்ணப்பப்படிவங்களையும், அத்தகைய பதிவு தொடர்பில் செலுத்தப்படற்பாலதான கட்டணங்கள் மற்றும் அத்தகைய பதிவு பற்றிய மீள் புதுப்பித்தல் பற்றிய கட்டணங்களையும் விதித்துரைத்தல் வேண்டும்.

(2) முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் விதித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு கட்டணமும் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு செலுத்தப்படுதல் வேண்டும். இச்சட்டத்தின்கீழ் உறுப்பாண்மை அலுவல்கள் சபையின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளைப் பிரயோகிப்பதில் நிறைவேற்றுவதில் மற்றும் புரிவதில் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை ஈடுகட்டுவதற்குத் தேவைப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் பேரவையின் அங்கீகாரத்துக்கமைந்ததாதல் வேண்டும்.

(3) உறுப்பாண்மை அலுவல்கள் சபை விண்ணப்பம் பெற்றுக் கொள்ளப்பட்டு ஒரு மாதத்திற்கு மேற்படாத காலப்பகுதியினுள் பதிவு செய்வதற்காக ஏதேனும் விண்ணப்பத்தின்மீது முடிவெடுத்தல் வேண்டுமென்பதுடன் அதன் முடிபின் ஒரு மாதத்தினுள் அதன் முடிபினையும் அதற்கான காரணங்களையும் விண்ணப்பகாரருக்கு அறிவித்தலும் வேண்டும்.

**27**. பேரவையின் அங்கீகாரத்துக்கமைய, உறுப்பாண்மை அலுவல்கள் சபை தோதான இடாப்பிலிருந்து எவரேனும் ஆளின் பெயரை அகற்றுவதற்கு பின்வருவனவற்றுக்காக தத்துவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்:- இடாப்பிலிருந்து பெயர்களை அகற்றுவதற் கான தத்துவம்

(அ) ஆளொருவர் தம்மை பதிவு செய்வதற்கு உரித்துடையதான தகைமைகளைக் கொண்டிருக்க வில்லையாயின்; அல்லது

(ஆ) உட்பிரிவு 17(2) இல் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகமையீனத்துக்கமைந்த ஆளொருவராகவரின்; அல்லது

(இ) அத்தகைய ஆளின் பதிவு மோசடி அல்லது பிறழ்பகர்வினால் பெறப்பட்டதாகவிருப்பின்; அல்லது

(ஈ) நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவுள்ளவரான அத்தகைய ஆள், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளின் சட்டங்களின் ஏற்பாடுகளின்கீழ் உறுப் பாண்மையிலிருந்து அகற்றப்பட்டிருப்பின்.

**28**. (1) காலத்துக்குக்காலம் கூட்டிணைக்கப்பட்ட குழு ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமுகமாயிருந்து வாக்களிக்கும் தொழிலிண்மைகள் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்குக் குறையாதோரின் வாக்குப் பொரும்பான்மையைக் கொண்டும், பின்வரும் விடயங்கள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றுக்காகவும்இச்சட்டத்தினதும்வேறேதேனும்எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு சட்ட முறையானததாதல் வேண்டும்:- விதிகளை ஆக்குவதற்கான தத்துவம்

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், ஒவ்வொரு உறுப்பினர் தரத்தினாலும் செலுத்தப்

படற்பாலனவான கட்டணங்கள் உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் போன்றவற்றில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை;

(ஆ) பேரவையின் அமைப்பும் தெரிவும், பதவி தாங்குநர்களின் பதவிக்காலம் பதவியை வறிதாக்கல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் பேரவையின் தத்துவங்கள், கடமைகள், பணிகள்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்களின், முகவர்களின் மற்றும் சேவை யாளர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் அவர்களுடைய நியமனம், ஊதியம், பதவிகளகற்றுதல் மற்றும் பதவி முடிவுறுத்தல்;

(ஈ) கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் மற்றும் அதன் தொழிலை நடாத்துதல் உள்ளடங்கலாக நிறுவகத்தினதும் பேரவையினதும் அதன் ஏதேனும் உபகுழுவினதும் கூட்டங்களைக் கூட்டுவதிலிலும் நடாத்துதலிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் மற்றும் பேரவையில் உறுப்பினராகவிருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக் கான தொழிலாண்மைசார் நடத்தைக் கோவை;

(எ) நிறுவகத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் மற்றும் பொதுவாக கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களின் முகாமையும்;

(ஏ) தனிப்பட்டவர்களுடன் அல்லது ஒழுங்கமைப்பு களுடன் ஏதேனும் தொழில் தொடர்பில் ஏதேனும்

ஒப்பந்தத்தில் அல்லது உடன்படிக்கையில் ஈடுபடுதலும் பேரம்பேசுத லும்;

(ஏ) கடன்வாங்குதல், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொறுப்பு முயற்சி மற்றும் ஆதனத்தை ஈடுவைத்தல் அல்லது அறவிடுதல்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் இச்சட்டம் நடைமுறைக்கு வருவதன்மேல், கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் காலத்துக்குக் காலம் செய்யப்பட்ட விதிகளுக்கமைந் தோராதல் வேண்டும்.

(3) இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததன் உடனடுத்து பொதுக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகள் உட்பிரிவு (1) இன்கீழ் ஆக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகள் எல்லா நோக்கங்களுக்காகவும் உட்பிரிவு (4) இற்கமைந்ததாதல் வேண்டும்.

(4) விதிகள் (1) ஆம் உட்பிரிவிற்கிணங்க வாக்களித்த பெரும்பான்மை உறுப்பினர்களின் தேவைப்பாட்டினால், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொதுக் கூட்டத்தில் மாற்றப் படலாம், சேர்க்கப்படலாம், திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதன்மேல் மூன்று மாதங்களினுள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன் தேதியிலிருந்து பயனுக்கு வருதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் ஆதனம்

**29**. இச்சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் கொள்ளப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட அசையும் மற்றும் அசையாத எல்லா ஆதனங்களும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட

எல்லாப் பணங்களும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கிணங்க கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் வைத் திருக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் நிதியம்

**30**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவினாலும் அது தொடர் பாகவும் கொடை, இறுதிவிருப்பாணவக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும், சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வரவிற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத் தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்

**31**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள், தகைமை பெற்ற கணக்காய்வாளரினால் பரிசோதிக்கப்பட்டு கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ''தகைமைபெற்ற கணக்காய்வாளர்'' என்பது-

(அ) 1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகச்சட்டத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக உள்ளவரும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராக உள்ள வருமான தனி ஆள் ஒருவர்; அல்லது

(ஆ) எக்கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் உள்ளாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

**32**. பேரவையின் ஆண்டறிக்கை ஒவ்வோராண்டின் ஏப்பிறல் முதலாம் நாளன்று தொடங்குகின்றதும் மாச்சு முப்பத்தோராம் நாளன்று முடிவடைகின்றதுமான பன்னிரெண்டு (12) மாத காலப்பகுதிக்கு தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள், கணக்குகள், ஐந்தொகை மற்றும் கணக்காய்வாளருடைய அறிக்கை என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும். ஆண்டறிக்கை

கூட்டிணைக்கப் பட்ட குழுவுக்கு வருமதியானதும் கூட்டிணைக் கப்பட்ட குழுவுக்கு செலுத்தப்படற் பாலவையுமான தனிசுகள்

**33**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று உளதாயிருக்கும் மன்றத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும், இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவு தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டி ணைக்கப்பட்ட குழுவுக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் இலச்சினை

**34**. கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை பேரவையின் செயலாளர் அல்லது உறுப்பினர்களின் முன்னிலையில் அன்றி எத்தகையதுமான ஏதேனும் சாசனமெதில் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனி வேறானதாதலும் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் அல்லது கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பணிப்பின்கீழ் செய்யப்பட்ட செயல்களுக்கு மான பாதுகாப்பு

**35**. (1) பின்வருவனவற்றுக்காக விடயத்துக்கேற்ப சிவில் அல்லது குற்றவியல் நடவடிக்கைமுறைகளெவையும் தொடுக்கப்படுதலாகாது-

(அ) இச்சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்வதற்கு முன்னப்பட்ட ஏதேனும் சட்டபூர்வமான செயலுக்கு கூட்டி ணைக்கப்பட்ட குழுவுக்கு எதிராக; அல்லது.

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது பேரவையின் பணிப்புகளின் மீது உறுப்பினர், அலுவலர், சேவையாளர் அல்லது முகவரால், நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட ஏதேனும் செயலுக்காக அத்தகைய உறுப்பினர், அலுவலர்,

சேவையாளர் அல்லது முகவர் என்போருக்கு எதிராக.

(2) இச்சட்டத்தின்கீழ் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பின்மீது செய்யப்பட்ட ஏதேனும் செயலுக் காக ஏதேனும் நீதிமன்றத்துக்கு முன்னர் அத்தகைய ஆளுக்கெதிராக கொணரப்பட்ட ஏதேனும் வழக்கு அல்லது வழக்குத் துடர்ச்சியில் (1) ஆம் உட்பிரிவில் குறித் துரைக்கப்பட்ட எவரேனும் ஆளினால் உறப்பட்ட எவை யேனும் செலவினங்கள பற்றி நீதிமன்றம் அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டது என தீர்மானிப்பின் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியங்களுக்குச் செலுத்தப் படுதல் வேண்டும்.

**36**. பொருள்கோடல்- பொருள் கோடல்

“IFMSL” என்பது, இலங்கையில் தாபிக்கப்பட்ட தொழில் வாண்மைசார் அமைப்பான இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவனம் எனப் பொருள்படும்;

“உறுப்பாண்மை” என்பது, இச்சட்டத்தில் குறித்துரைக் கப்பட்ட கட்டளைகளுக்கு இணங்க பல்வேறுபட்ட வகுதிகளிலான IFMSL இன் உறுப்பினர்கள் எனப் பொருள்படும்;

“பொதுக்கூட்டம்” என்பது, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கிணங்க கூட்டப்பட்டதும் நடாத்தப்பட்டதுமான கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களின் கூட்டமொன்று எனப் பொருள்படும்;

“விதிகள்” என்பது, இச்சட்டத்தின் 28(1) ஆம் உட்பிரிவுக் கிணங்க கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் IFMSL இன் விதிகள் எனப் பொருள்படும்;

"தொழில்வாண்மை உறுப்பினர்" என்பது, பிரிவு 9 இன் ஏற்பாடுகளுக்கிணங்க பதிவு செய்யப்படுகின்றதன் மீது பட்டயப்பெற்ற வசதிகள் முகாமையாளர் எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றவாரான கூட்டு உறுப்பினர் அல்லது உறுப்பினரொருவராக அப்போதைக்கு நிறுவகத்தின் உறுப்பாண்மையைக் கொண்டுள்ளவரான ஆள் எனப் பொருள்படும்;

"பேரவை"என அறியப்படும் "பொதுப் பேரவை" என்பது, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அல்லது தெரிவுசெய்யப்பட்ட பதவி தாங்குநர்களின் அமைப்பு, கடப்பாடு மற்றும் நிருவாகம் எனப் பொருள்படும்;

"இடாப்பு" என்பது, உறுப்பாண்மை அலுவல்கள் சபையின் பதிவாளர்/ செயலாளரான பேரவையினால் நியமிக்கப்பட்ட தொழில்வாண்மைசார் உறுப்பினர் எனப் பொருள் படும்.

குடியரசின் உரிமைகளைப் பேணல்

**37**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப் படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**38**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்.